03.09.2025

O.S.No. 88/2023

PW2– சுடலைச்சாமி– த/பெ. மகாலிங்கம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.09.2025

குறுக்கு விசாரணை : (பிரதிவாதி தரப்பில்)

1. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். எனது தந்தையுடன் உடன்பிறந்தவர்கள் என் தந்தையும் சேர்த்து மொத்தம் 6 பேர். வழக்கு சொத்தின் புல எண்.530/2பி ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 32 செண்ட். அதன் எல்கைமால் கிழக்கே சண்முகசுந்தரம், ராமசாமிபாண்டியனும், மேற்கே சுரேஷ், வடக்கு ரஞ்சித்குமார், தெற்கே குத்தாலிங்கம் இடமும் உள்ளது. எல்கைமால் விவரம் எனது தந்தைக்கு தெரியாததால் தான் பிராது தபசில் விவரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் எனது தந்தைக்கு காது சரியாக கேட்காது. எல்கைமால் தவறு என்றால் சரியல்ல.

2. தாவா சொத்தும், இதர சொத்தும் எனது தாத்தாவுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது தாத்தாவுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது தந்தையும், அவரது உடன்பிறந்தவர்களும் பாகம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு பாகபிரிவினை நடந்திருக்கலாம். பாகபிரிவினையில் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் அவரவருக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கு மட்டும் தவறுதலாக பட்டா ஏற்பட்டுள்ளது. வழக்கு சொத்தில் எனது தந்தைக்கு ஒருகாலத்திலும் பட்டா ஏற்பட்டது கிடையாது என்றால்

எனக்கு தெரியாது. 40 ஆண்டுகளாக பிரதிவாதி தகப்பனாரின் பெயரில் பட்டா இருக்கிறது என்றால் சரிதான். பிரதிவாதி தகப்பனார் இறந்தபிறகு பிரதிவாதியின் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக ஏற்பட்டுள்ளது. எனதுதந்தை படிப்பறிவு இல்லை என்பதால் தீர்வை கட்டியவிவரம் தெரியாது. எனது தந்தைக்கு பாகபிரிவினையில் கிடைத்த சொத்துக்களில் சில சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். சில சொத்துக்களை எனதுபெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தபசில் சொத்து பிரதிவாதி அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிதான் தபசில் சொத்தில் உள்ள 4 தென்னைமரங்களின் பலன்களை அடைந்துவருகிறார் என்றால் சரியல்ல. தபசில்சொத்தில் தென்னைமரம், தென்னங்கன்று உள்ளது என்றால் சரிதான். எனதுமுதல்விசாரணை உறுதிக்கூற்றில் தென்னைமரம், தென்னங்கன்று உள்ளது சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது அனுபவத்தில் இல்லாததால் தான் தென்னைமரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதியின் அனுபவத்தில்இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.